மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.396/2015

2026ம் ஆண்டு ஜனவரி 22ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

22.01.2026 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் வாதி ஆவேன். இந்த வழக்கிற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 01.03.2016 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.2

2. 15.05.2017 தேதியிட்ட 1ம் வாதியின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.3

3. 20.07.2019 தேதியிட்ட 1ம் வாதியின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.4

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

4, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நாங்கள் காலம் சென்ற எனது தாயார் ராமாத்தாள் என்பவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தில் பாகம் கேட்கிறோம்

என்றால் சரிதான். என் தாயார் 2017 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என் தாயார் வயோதிகம் ஆகி தான் காலமானார் என்றால் சரிதான். என் தாயாருக்கு இறக்கும்போது 90 வயது இருக்கும். என் தாயார் நான்கைந்து மாதம் இறப்பதற்கு முன் படுத்த படுக்கையாக இருந்து பின்னர் காலம் ஆகிவிட்டார். என் தாயார் தனது சொந்த உழைப்பை கைவிட்டு விட்டு மகன்களாகிய எங்கள் பராமரிப்பில் இறப்பதற்கு முன் ஒரு 10 ஆண்டுகளாக இருந்திருப்பாரா என்றால் ஆமாம்.

2. என் தகப்பனார் காலமாகி 20 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். என் தாயாரின், தகப்பனார் இறந்து போய் சுமார் 40 ஆண்டுகள் இருக்கும் என்றால் அதற்கு மேல் இருக்கும். என் தாயாரின் தகப்பனாருக்கு வாரிசுகள் இரண்டு ஆண் மக்கள் மற்றும் இரண்டு பெண் மக்கள் என்றால் சரிதான். என் தாயாருடன் பிறந்த இரண்டு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி ஆகியோர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். எனது தாயாரின் தகப்பனார் இறந்து போய் சுமார் 40 ஆண்டுகள் கழித்து தான் எனது தாயாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

3. என் தாயாரின் சகோதரியான பெரியம்மாள் என்பவர் இதுவரை பாகம் கேட்டு எந்த வழக்குகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அவர்கள் தங்களுக்கு பாகம் வேண்டும் என்று எந்த எதிர்வாதமும் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. என் தாயாரின் சகோதரி பெரியம்மாள் என்பவரின் மகன் தான் இந்த வழக்கின் 8ம் பிரதிவாதி முருகேசன் என்றால் சரிதான். என் தாயார் உயிரோடு இருந்தவரை வழக்கு சொத்துக்கள் மற்றும் அவரது

சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு எந்த ஆவணங்களும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. எங்களுக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களுக்கு அருகில் தாவா சொத்துக்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் என்ன மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் அது எங்கள் சொத்துக்களில் இருந்து பார்த்தால் தெரியும் என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் 1989 காலகட்டத்தில் எவ்வாறு நிலையில் இருந்ததோ அதை தான் வழக்குரை சொத்து விவரத்தில் நாங்கள் விவரித்துள்ளோம் என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகளான பழனிச்சாமி மற்றும் வேலுச்சாமி ஆகியோர்கள் தாவா சொத்துக்களில் அமைத்துள்ளகிணறு போர்வெல் மற்றும் மோட்டார் ஆகியவற்றைப் பொறுத்து வழக்குரை சொத்து விபரத்தில் நாங்கள் சேர்த்து பாகம் கோர வில்லை என்றால் ஆமாம் இந்த வழக்கை நானும் என் சகோதரர் பழனிச்சாமியும் விவரங்கள் சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம் என் அம்மா தான் முதலில் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கிற்க்கான சொத்து விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் நானும், என் சகோதரரும் சொன்னோம்.

6. தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் தற்போது 4ம் மற்றும் 7ம் பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றும் அதற்கு முன்பு அவர்களது தகப்பனாரான குமாரசாமி மற்றும் நாச்சப்ப கவுண்டர் ஆகியவர்கள் பெயரில் தான் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை 4 மற்றும் 7

பிரதிவாதிகள் வகையறாக்கள் விவசாய கடனுக்காக அடமானம் வைத்து அனுபவம் செய்து வந்ததை நாங்கள் தடுக்கவில்லை என்றால் அந்த விபரமே எங்களுக்கு தெரியாது.

7. தாவா சொத்துக்களை நானும் என் சகோதரரும் இதுவரை கடனுக்கோ மற்றும் அடமானத்திற்கோ உட்படுத்தவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்களில் நானோ, எனது தாயாரோ மற்றும் என்று சகோதரரோ சுவாதீனத்தில் மற்றும் அனுபவத்தில் இருந்ததை காட்டக்கூடிய ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வேலுச்சாமி ரீ.ச.எண்.258 பி பூமியில் வியாபார ரீதியிலான மின் இணைப்பு பெற்று குடோன் அமைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது நாங்கள் சற்று தள்ளி உள்ளோம். நாங்கள் இந்த வழக்கு சொத்திற்கு எந்த விதமான வரிகளும் செலுத்தவில்லை என்றால் ஆமாம்.

8. ரங்கசாமி மகன் குமாரசாமி என்பவர் யார் என்றால் அவர் எங்கள் இருவர் தோட்டத்திற்கும் பக்கத்து தோட்டத்துக்காரர். குமாரசாமி கவுண்டரும் நாச்சப்பகவுண்டரும் 2008 ஆம் ஆண்டு பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அதை ரங்கசாமி மகன் குமாரசாமி என்பவரும் எனது சகோதரரான 3ம் வாதியும் உடன் இருந்து தான் அந்த பாகப்பிரிவினை செய்து வைத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் 4 மற்றும் 7 பிரதிவாதிகளையோ அல்லது அவர்களின் முன்னோர்களையோ இதுவரை சந்தித்து தாவா சொத்தில் பாகம் செய்து கொடுக்கும்படி கேட்கவில்லை என்றால் ஆமாம்.

9. 2008 ஆம் ஆண்டுதாவா சொத்துக்களைப் பொறுத்து நாலு மற்றும் ஏழு பிரதிவாதிகள் மற்றும் அவர்களது முன்னோர்களுக்கிடையே நடைபெற்ற பாகப்பிரிவினை தெரிந்து கொண்டு அதைப்பற்றி எனக்கு தெரியாது என தற்போது வழக்கிற்காக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கே என்னாலும் எனது சகோதரராலும் என் தாயாருக்கு தெரியாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

10. அதனால் தான் என் தாயார் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கக்கூடாது என அவரிடமிருந்து பவர் பத்திரம் வாங்கி வைத்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நானோ எனது சகோதரரோ எந்த காலத்திலும் அனுபவம் செய்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி கவுண்டர் என்பவர் இறந்து போய் 40 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.22 18:33:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.